**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
***ஓ.எஸ்.42/2020***
**2025-ம் ஆண்டு ஜீன் மாதம் 26-ம் நாள்** வியாழக்கிழமை

**வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869ம் ஆண்டு சட்ட எண். 44வது பிரிவு 6(1)ன்படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : சந்திரா | **சாதி** | **:** |
| **த-பெ** | **:** | **சமயம்** | **:** |
| **கிராமம்** | **:** | **தொழில்** | **:** |
| **வட்டம்** | **:** | **வயது** | **:** |

**வா.சா 1 சந்திரா ஆஜர்.**

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் தாக்கல் செய்துள்ள பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் பிரதிவாதிகள் எனக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிரப்பு செய்ய முயற்சித்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன் நீள, அகலங்களை சொல்லியுள்ளேனா என்றால் நீளம் 39 அடி, அகலம் சரியாக நினைவில்லை. ஆனால் 15 அடி எனக்கு உள்ள பாதையை இல்லை என்று எதிர்வாதிகள் மறுக்கிறார்கள். என் வீட்டிற்கு அருகில் சித்திரைசாமி, சங்கரன், கிருஷ்ணன் ஆகியோர்கள் குடியுள்ளார்கள் என்றால் சரிதான். சித்திரைசாமி, சங்கரன், கிருஷ்ணன் ஆகியோர்கள் பிரதிவாதியை பாதைகேட்டு எந்தவிதமான சொந்தரவு செய்யவில்லை என்றால் மேற்படி 15 அடி பாதையானது எனக்கு மட்டும் தான் சொந்தம் என்னை மட்டும் தான் தொந்தரவு செய்கிறார் அதனால் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

என் கணவர் வாங்கியுள்ள கிரயபத்பத்திரத்தின் நான்கெல்லையானது தென்வடல் வீதிக்கு மேற்கு என கண்டுள்ளது என்றால் சரிதான். அது போல் ரயில்வே காம்பவுண்ட் சுவர் என் வீட்டிற்கு தெற்கே உள்ளது என்றால் சரிதான். ரயில்வே காம்பவுண்ட் சுவருக்கு அந்த பக்கம் வீடுகள் உள்ளதா என்றால் வீடுகள் இல்லை. சுவர் மட்டும் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் தென்வடல் வீதியானது தெற்கே உள்ள ரயில்வே சுவர்வரை செல்கிறது என்று சொல்லியுள்ளீர்கள் அவ்வாறு பூமியில் கிடையாது என்றால் பூமியில் உள்ளது. நீதிமன்ற ஆணையாளர் தன் அறிக்கையில் தென்வடல் வீதி பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான்

சொல்லும் பாதையானது சர்வே எண் 503/2 ல் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட காலி இடம் என்றால் சரியல்ல. சர்வே எண் 503/2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதால் தகரம் வைத்து மறைத்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நான் குடியிருக்கும் 15 அடி பொதுப்பாதை ரயில்வே சுவர் வரை செல்கிறது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 25.06.2020 ம் தேதி முதல் என் வீட்டின் பாதையை மறைக்க பிரதிவாதிகள் முயற்றி செய்கிறார்கள் என்று சொல்லியுள்ளேன் அவ்வாறு அவர்கள் முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் தாவா சொத்திற்கு கிழ – மேல் ஆகவும் தென்-வடலாகவும் பாதை அமைப்பு பூமியில் உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் தென்வடல் வீதிக்கு தெற்கே உள்ள ரயில்வே வீதிவரை செல்கிறது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள பிராதில் சொத்து விபரத்தில் பிரதிவாதிகள் காலிமனை இடத்திற்கும் தென்வடல் வீதிக்கும் மேற்கு என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லும் அந்த தென்வடல் பாதை பகுதியானது பூமியில் இல்லை என்றால் சரியல்ல. தென்வடல் பாதையும் கிழமேல் பாதையும் என் வீட்டிற்கு முன்பாக ( எல் ) வடிவில் திரும்புகிறது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு பாத்தியமான புல எண் 503/2 ல் மேற்கு பக்கம் உள்ள காலி இடத்தை அபகரிக்க வேண்டி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரயம் வாங்கிய இடம் பூமியில் என் பத்திரப்படி உள்ளது என்றால் நான் கிரயம் வாங்கிய இடம் எங்களிடம் உள்ளது.

நான் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தை எனக்கு பாத்தியம் என பாதை கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் ஆனால் பொதுஉரிமை விளம்புகை பரிகாரத்தின் படி வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் பொதுஉரிமை விளம்புகை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யாததால் பூமியில் பாதை இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் தென்வடல் 15 அடி பாதை தொடர்சியாக ரயில்வே இடம் வரை பூமியில் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் பக்கம் 3 ல் 8 வது வரியில் ' மேற்படி காலிஇடத்திற்கு கிழக்கே முத்துராஜா தேவர் என்பவர் பெயரில் உள்ள பட்டா இடம் சர்வே எண் 503/2 காணப்பட்டது மேற்படி காலிஇடத்திற்கு கிழக்கே எந்தவித பாதை அமைப்பும் காணப்படவில்லை, மேற்படி காலி இடமும் தென்வடலாக தகரங்களால் வேலி அமைத்து காணப்பட்டுள்ளது என்று கண்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் சொல்வது போல் பூமியில் எந்தவிதமான பாதை அமைப்பும் இல்லை, என் வீட்டிற்கும் என் காலி இடத்திற்கும் தென்வடல் ரோட்டின் வீதியும் கிழமேல் வீதியும் எல் வடிவத்தில் உள்ளதை மறைத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் பாதை கேட்டு பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ 1**ஆகும். வரைபடம் **நீ.ம.சா.ஆ 2** ஆகும்.

**<u>வாதி தரப்பில் மறு விசாரணை:</u>**

இல்லை.

**-Sd-**
**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**-Sd-**
**District Munsif,**
**Manamadurai.**